**சின்ன சின்ன நுட்பங்கள்.. பெரிய பெரிய பலன்கள்.. அரை ஏக்கர் உளுந்து.. அரை ஏக்கர் காய்கறி..**

**25.11.2013**




கனஜோராய் காய்கறி விற்பனை...

வழக்கமான சாகுபடி வழிமுறைகளோடு நின்று விடாமல், அனுபவம் மற்றும் அறிவாற்றல் மூலமாக... அவ்வப்போது புதிய புதிய தொழில்நுட்ப முயற்சிகளை மேற்கொண்டால்தான், விவசாயத்தில் கூடுதல் பலன்களைப் பெறமுடியும்.

இப்படி வேளாண் அறிஞர்கள் சொல்வதை, தனது பண்ணையில் நடைமுறைப்படுத்தி நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.. தஞ்சாவூர் மாவட்டம், உச்சிமாஞ்சோலை, முருகன். உளுந்து மற்றும் காய்கறி சாகுபடிகளில் இவர் கடைபிடிக்கும் சில தொழில்நுட்பங்கள், இப்பகுதியைச் சேர்ந்த பலரையும் புருவம் உயர்த்த வைக்கிறது!

பச்சை பசேலென செழிப்பாக காட்சி அளிக்கும் காய்கறித் தோட்டத்தில், முருகனை சந்தித்தோம்.புதுக்கோட்டை மாவட்டம், பல்லவராயன் பட்டிதான் சொந்த ஊர். ஐ.டி.ஐ படித்துவிட்டு, தனியார் கம்பெனியில் வேலை பார்த்தேன். ஆனால், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால்.... விவசாயத்தில்தான் நாட்டம் அதிகமாக இருந்தது. வேலையை விட்டுவிட்டு, நானும் மனைவியும் இந்த ஊருக்கு, வந்து தங்கி, மூன்று ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு பிடித்து, பத்து வருடமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம்.

ஒரு வருடமாக, ஒரு ஏக்கரில் மட்டும் இயற்கை விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். மீதி இரண்டு ஏக்கரில் தீவனப்பயிர் இருக்கு. இதையும் சீக்கிரமே முழுமையான இயற்கை விவசாயத்திற்கு மாற்றிவிடுவேன். தினமும் மாலை நேரத்தில் கடை போட்டு, நானே நேரடியாக காய்கறிகளை விற்பனை செய்கிறேன். இயற்கைக் காய்கறி என்பதால்.. தேடி வந்து வாங்கி கொள்கிறார்கள். இப்போது, நிரந்தரமான வாடிக்கையாளர்களும் கிடைத்துவிட்டார்கள் என்றார்.

இது செம்மண்ணும் மணலும் கலந்த இருமண்பாடு நிலம். இயற்கை விவசாயம் செய்து கொண்டிருக்கும் நிலத்தில் அரை ஏக்கரில் காய்கறிகளும், அரை ஏக்கரில் மாப்பிள்ளைச் சம்பா நெல்லும் பயிர் செய்திருக்கிறேன். இயற்கை விவசாயத்தில் முதல் பயிராக உளுந்துதான் போட்டேன். பத்து டன் மாட்டு எரு, ஒரு டன் ஆட்டு எரு மட்டும் போட்டதில் ... நல்ல மகசூல். வழக்கமாக, உளுந்து விதையைத் தெளித்துவிட்டு, பாத்தி கட்டிதான் தண்ணீர் பாய்ச்சுவாங்க. ஆனால், உளுந்துக்கு அந்தளவுக்கெல்லாம் தண்ணீர் தேவையே இல்லை. பாத்தி கட்டி தண்ணீர் பாய்ச்சினால், மண் இறுகிப் போய், காற்றோட்டம் பாதிக்கப்படும். களைகளும் அதிகமாக மண்டும். தண்ணீரில் முங்குவதால் விதைகளுடைய வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

### பாசனத்தில் உள்ள சூட்சமம்!

உளுந்தைப் பொருத்தவரை விதைகளைத் தெளிக்கத்தான் செய்ய வேண்டும். ஆனால், அதிகமாக தெளிப்பதால், நெருக்கமாகத்தான் செடி வளரும். இது, செடிகளுக்குத் தேவையான சூரிய வெளிச்சம், காற்றோட்டம் இல்லாமல் செய்துவிடும் என்பதால்… வளர்ச்சியும் பாதிக்கும். அதனால்.. ஏக்கருக்கு 5 கிலோ விதை என்ற கணக்கில் தெளித்துவிட்டு.. பார் கலப்பையை ஓட்டி, ஒரு அடி இடைவெளியில் 2 அடி அகலத்திற்கு பார் எடுத்தேன். பார் மேல் விதைகள் ஏறிவிட்டது. பாருக்கு பார் இருக்கும் இடைவெளியை வாய்க்காலாக பயன்படுத்தி, தண்ணீர் பாய்ச்சினேன். வாய்க்காலில் மட்டுமே தண்ணீர் பாய்ஞ்சதால்.. அறுவடை வரைக்கும் பாரில் இருக்கும் மண் பொல பொலப்பாகவே இருந்தது.

வாய்க்காலில் மட்டும்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக களைகள் இருந்தது. போகிற போக்கில் அதைப் பிடுங்கிப் போட்டுடுவேன். இந்த மாதிரி வாரம் ஒரு தண்ணீர்தான் கொடுத்தேன். பாரில் எப்பவும் ஈரம் இருந்து கொண்டே இருந்தது. தெளிப்பிற்கு வேப்ப எண்ணெய், மீன் அமிலம் மட்டும்தான் பயன்படுத்தினேன். 60 நாளில் நன்றாக வளர்ந்து.. ஏக்கருக்கு 4 குவிண்டால் மகசூல் கிடைத்தது. நான் சாகுபடி செய்தது.. 60 நாள் வயது கொண்ட ரகமாக இருந்திருந்தால்… எட்டு குவிண்டால் வரை மகசூல் கிடைத்திருக்கும்.
எங்கள் பகுதியைப் பொருத்தவரைக்கும் இது நல்ல மகசூல்தான். அதுவும் இயற்கை விவசாயத்திற்கு மாறிய முதல் சாகுபடியில் இவ்வளவு கிடைத்தது பெரிய விஷயம். பாத்தி கட்டி தண்ணீர் பாய்ச்சும் போது அதிகளவில் களை மண்டும். தண்ணீரும் வீணாகும். ஏக்கருக்கு எட்டு கிலோவிலிருந்து… பத்து கிலோ வரைக்கும் விதைகள் தேவைப்படும். ஆனால், நான் 5 கிலோ விதையிலேயே.. இத்தனை மகசூல் பார்த்தது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

உளுந்து, கொஞ்சம் கூட பொக்கு இல்லாமல்… திரட்சியாக இருந்தது. அதனால், ஒரு கிலோ 70 ரூபாய் என்று விலை கிடைத்தது. நேரடியாக விற்பனை செய்துவிட்டேன். 28 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. செலவு போக… 18 ஆயிரம் ரூபாய் கையில் கிடைத்தது என்றார் முருகன்.

### ஒரே பாரில் செடியும் கொடியும்!

அரையடி ஆழத்திற்கு வாய்க்கால் எடுத்து அதில், மாட்டு எருவைப் போட்டுடுவேன். பக்கத்திலேயே இன்னொரு வாய்க்கால் தோண்டி, அந்த மண்ணை வைத்து, மாட்டு எரு கொட்டிய வாய்க்காலை மூடி… அதில் வரிசையாக காய்கறி விதைகளை விதைத்திடுவேன். மண்ணுக்கடியில் எரு இருப்பதால்.. அதில் முளைத்த செடிகளுக்கு வேர் வழியாக தடையில்லாமல் சத்து கிடைத்துக் கொண்டே இருக்கும். அதனால், வாரத்திற்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சினாலே போதும். பாரோடுடைய ஒரு ஓரத்தில் செடி வகை காய்கறியும், இன்னொரு ஓரத்தில் கொடி வகை காய்கறியும் மாற்றி மாற்றி பயிர் செய்திருக்கிறேன். வெண்டை, கொத்தவரை, புளிச்சக்கீரை, பாகல், குட்டைப் புடலை, பொரியல் தட்டை, பீர்க்கன் என்று நிறைய காய்கள் இருக்கு. கொடிகளுக்கு மட்டும் வரிசைப் பந்தல் போட்டிருக்கிறேன். வேலி ஓரத்தில் பூசணி, சுரை இருக்கு.

அரை ஏக்கரில் எல்லா காய்களும் சேர்த்து, தினமும் சராசரியாக 20 கிலோ அளவுக்கு மகசூலாகிறது. ஒரு கிலோ 30 ரூபாய் அளவுக்கு விற்பனை செய்கிறேன். புளிசக்கீரை, பூசணி, சுரைக்காய் மூலமாகவும் அப்பப்ப

வருமானம் வருகிறது. எல்லாம் சேர்த்து மாதத்திற்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் வருமானம் கிடைக்கிறது. செலவு போக, காய்கறியில் மாதம் 10 ஆயிரம் ரூபாய் கையில் நிற்கிறது என்றார் முருகன்.

---

தொடர்புக்கு

**முருகன், செல்போன் : 94866 06351**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.10.13 www.vikatan.com***